**செய்தி வெளியீட்டு எண்.907**

## செய்தி வெளியீடு – 24.10.2008

தமிழக அமைச்சரவையின் 32வது கூட்டம் இன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

'சட்டமன்றப் பேரவையில் கலைஞர்' பொன்விழா நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் சட்டமன்றப் பேரவைக்கு புதிய கட்டடம் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ''ஜீ.எம்.பி. இண்டர்நேஷனல்'' நிறுவனம் தயாரித்த கட்டட வடிவமைப்பு இறுதி செய்யப்பட்டு, அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டு திருத்திய மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் அளிப்பதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

போலி முத்திரைத்தாள்களின் புழக்கத்தைத் தவிர்த்திட பதிவு செய்யப்படும் ஆவணங்களுக்குச் செலுத்தப்படவேண்டிய முத்திரைத் தீர்வையை வசூலிக்க மாற்றுவழியாக மின்னணு மூலமாக முத்திரைத் தீர்வையைச் (e-stamping) செலுத்தும் முறையை மத்திய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட Stock Holding Corporation of India Limited நிறுவனம் மூலமாகச் செயல்படுத்திட அமைச்சரவை முடிவு செய்துள்ளது. இம்முறை முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில சார்பதிவாளர் அலுவலகங்களில் செயல்படுத்தப்பட்டு, பின்னர் படிப்படியாக அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

மண்வள மற்றும் நீர்வள பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை மற்றும் வட்டியுடன் சேர்த்து 196 கோடியே 37 இலட்சத்தை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று விவசாயிகளிடமிருந்து அரசிற்கு வந்த வேண்டுகோளை ஏற்று மேற்படி கடன்தொகையை தள்ளுபடி செய்வதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

* * *

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9.